**SC.No. 131 /2024**
நாள் **13.08.2024.**
**P.W. 59-** சங்கர்
A1, A3 , A4 , A9, A11, A12, A14, A16, A17 absent. A5, A18 died, Others present.
A10,A13,A15 Counsel for the accused present
**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

இறந்தவரை காயப்படுத்திய பின்னர், காயப்படுத்திய நபர்கள் மேற்காக சென்று தெற்கு நோக்கி மறைந்துவிட்டனர் என்பது விசாரணையின்போது கூறப்படுகிறது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி எத்தனை பேர்கள் ஓடினார்கள் என்றால் 11 எதிரிகள் ஓடினார்கள். முதல் தகவல் அறிக்கையின் படி வெற்றிவேலை காயப்படுத்தியவர்கள் அடையாளம் தெரியாத பார்த்தால் அடையாளம் கூறக்கூடிய 6 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட 6 நபர்களை தவிர மேலும் 5 நபர்கள் சேர்ந்து மேற்காக ஓடியதாகதான் வழக்கு அவர்களின் நான்கு நபர்கள் இருசக்கர வாகனத்தில் ஓடியவர்கள். அந்த இருசக்கர வாகனத்தில் ஓடிய 4 நபர்கள் விசாரணையில் துலங்கும். அவ்வாறு இருசக்கர வாகனத்தில் சென்ற 4 நபர்களில் சுரேஷ், மாரியப்பன், ராதாகிருஷ்ணன் என்கிற ராதா இல்லை என்றால் சரிதான். வெற்றிவேலை காயப்படுத்திய நபர்கள் யாரும் காயப்படுத்தப்பட்ட இடத்திற்கு வடக்கே ஓடிச்சென்று மறைந்ததாக எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். வேறு ஏதாவது ஒருமுறையில் வெற்றிவேலை காயப்படுத்திய நபர்கள் யாரும் காயப்படுத்தப்பட்ட இடத்திற்கு வடக்கே ஓடிச்சென்றதாக தெரியவந்ததா என்றால் வேறு எந்த சாட்சிகளும் அவ்வாறு ஏதும் கூறவில்லை. அவ்வாறு வெற்றிவேலை காயப்படுத்திய நபர் காயப்படுத்தப்பட்ட இடத்திலிருந்து வடக்கே ஓடிச்சென்றதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அவ்வாறு கூறியிருக்க வாய்ப்பு இல்லை. கண்ணுற்ற சாட்சிகள் யாரும் மற்றும் ஏதும் இல்லை என்பதால் தான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரிதான். TN 69 C 0790 மற்றும் TN 72 X 444 ஆகிய வாகனங்கள் நின்ற இடம் பற்றி பார்வை மகசரில் கூறப்படவில்லை. அதற்காக பார்வை மகசர் தயாரிக்கப்படவில்லை. அந்த வாகனம் நின்ற இடத்திற்கு பார்வை மகசர் தயாரிக்கப்படவில்லை. சுரேஷ், மாரியப்பன், ராதகிருஷ்ணன் என்கிற ராதா ஆகியோர்கள் மேற்கண்ட வாகனத்தின் மூலம்

தப்பித்து செல்ல முயற்சிக்கவில்லை என்பது அரசு தரப்பு வழக்கு அல்ல என்றால் எனது விசாரணையில் அவ்வாறு துலங்கவில்லை. மேற்கண்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்ட இடத்திற்கு யார் கொண்டு வந்தார்கள் சாட்சிகள் வாக்குமூலத்தில் துலங்காது. ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும். அது சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும் நாள்வரை வாகனங்கள் எவ்வாறு வந்தது என்று தெரியாது. வாகனங்கள் பற்றி எதிரிகள் கொடுத்ததாக கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் அந்த எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அல்ல என்றும், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வாகனம் யாரால் கொண்டுவரப்பட்டது என்று கூறப்படவில்லை என்றும் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட வாகனங்கள் சுரேஷ், மாரியப்பன், ராதாகிருஷ்ணன் என்கிற ராதா ஆகியோர்கள் சம்பவத்திற்கு முன்போ அல்லது சம்பவம் நடந்த அன்றோ பயன்படுத்தியதாக விசாரணையில் துலங்காது. எப்போது அந்த வாகனத்தில் சுரேஷ், மாரியப்பன், ராதாகிருஷ்ணன் என்கிற ராதா ஆகியோரின் கைரேகைகள் பதிவாகி இருந்தது என்றால் கைரேகை நிபுணர் அறிக்கை கிடைத்த பின்னர் தான் அந்த பதிவு பற்றி எனக்கு தெரியும், அதனால் எப்போது பதிவாகி இருந்தது என்று எனக்கு நேரில் தெரியாது. அனுமானமாக நான் கூறுகிறேன். மேற்படி நபர்களின் கைரேகைகள் எவ்வாறு, எப்போது பதிவாகி இருந்தது என்று எனக்கு குறிப்பாக தெரியாது. சுரேஷ், ராதாகிருஷ்ணன் இருவரின் கைரேகைகள் மேற்கண்ட இரண்டு வாகனங்களிலும் மேற்படியார்களை கைது செய்த பின்னர் மேற்கொண்ட கைரேகை பதிவுகள் என்றால் சரியல்ல. எனவேதான் அன்றைய தினம் சம்பவ இடத்தில் என்னென்ன கைரேகை பதிவுகள் கிடைத்தது என்ற அறிக்கையை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எ 9,எ 10,எ 13,எ 15,எ 18 எதிரிகள் கூலிக்கு கொலை செய்பவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அனைவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த விவரம் கூறப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக கூலிக்கு கொலை செய்பவர்கள் என்று நான் தனி விசாரணை எதுவும் நடத்தவில்லை. மேற்கண்ட எதிரிகளிடம் என்னென்ன கொலை குற்ற வழக்குகள் உள்ளது என்று தனியே விசாரணை நடத்தவில்லை. 08.01.2010 சாட்சி சிவசுப்பிரமணியை விசாரித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலம் எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று

ஞாபகமில்லை. 06.04.2010 அன்று அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் மேற்கண்ட வாக்குமூலத்தில் அவ்வாறு நீதிமன்ற தேதியிட்ட பதிவுகள் காணப்படுகிறது. உடனடியாக ஏன் அனுப்பப்படவில்லை என்பதற்கு குறிப்பான காரணங்கள் ஏதுமில்லை. இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் ஆவணங்கள் அனைத்தும் நான் சொன்ன நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதால்தான் அவை மிகுந்த தாமதத்துடன் நீதிமன்றத்தை அடைந்துள்ளது என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் அவரது திருமணத்திற்கு பின்னர் எத்தனை முறை ஸ்ரீவைகுண்டம் சென்றிருந்தார் அந்த ஊரில் அவருக்கு யார் யாரெல்லாம் பழக்கமானவர்கள் என்று நான் தனியே விசாரிக்கவில்லை அவர் திருமாணமான ஊர் என்பதால் குறிப்பாக கூற இயலாது. சுரேஷ் மற்றும் ராதாகிருஷ்ணனை அடையாளம் காட்ட தயாராக இருப்பதாக சொல்லியுள்ள சாட்சிகள் குறிப்பாக கூறியுள்ளார்களா என்றால் கூறியுள்ளார்கள் பெயர்களை குறிப்பிட்டு கூறவில்லை. கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 பெயர்களை குறிப்பிட்டே எனது விசாரணையில் கூறியதாக சாட்சியமளித்திருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.2 அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டபின்னர் அடையாளம் காட்டிய நபர்களின் பெயரை அடையாள அணிவகுப்பு நடத்திய நடுவர் கேட்டு குறித்துக்கொண்டபோது தெரிந்துகொண்டதாகவும் என்னுடைய விசாரணையில் கூறவில்லை. அவர் அவ்வாறு கூறியதாகவும் அதை நான் பதிவு செய்யவில்லை என்று சாட்சியமளித்திருந்தால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டபோது அடையாளம் காட்டப்பட்ட நபர்கள் என்னென்ன குற்றச் செயல்கள் செய்தார்கள் என்று எனது விசாரணையில் கூறினார்கள். அ.சா.2 ஐ நான் விசாரித்தபோது அவர் கூறிய விவரங்கள் அனைத்தையும் நான் பதிவு செய்யவில்லை என்றால் வழக்கிற்கு எது தேவையோ அதை மட்டும் நான் பதிவு செய்துகொள்வேன். அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட பின்னர் அ.சா.2 ஐ நான் விசாரித்தபோது அவர் வாக்குமூலத்தில் ஐயப்பன், ராதகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர்களைப் பற்றி கூறியிருந்தார்களா என்றால் அவ்வாறு கூறவில்லை. 10,13,15 எதிரிகள் மீது உண்மைக்கு புறம்பாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில்

மேற்கண்ட நபர்களுக்கு எதிராக கூறப்பட்ட அனைத்து சூழ்நிலைகளும் வழக்கிற்காக எங்களால் கூறப்படும் கற்பனையானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வெற்றிவேல் எதற்காக காயப்படுத்தப்பட்டார் என்பது குறித்து பிரேத விசாரணையின்போது சாட்சிகளை விசாரித்தேனா என்றால் விசாரித்துள்ளேன் அதற்கு முன்பே அதற்கான காரணம் தெரிந்தது. பிரேத விசாரணையின்போது தாங்கள் விசாரித்த பஞ்சாயத்தார்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் அடிப்படையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யப்பட்டது. 10,13,15 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அவர்கள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.